# கல்மனம் தான்

எதிர் வீட்டிலிருந்து அந்த ஒற்றை ரூபாயைக் கேட்டுத்தான் வாங்க வேண்டுமென்று ராதை முடிவு கட்டினாள். நாலு நாள் காய்கறிக்கு அந்த ரூபாய் பயன்படும். கறிகாய் சேர்ந்தால் உணவு சிறக்கும். உணவு சிறந்தாலே மனம் நிறையும். இந்த மனநிறைவு ஏற்படக் கூடாதா மாசக் கடைசியிலே? பச்சென்று கீரை வகைகள் வாசலில் விற்பனைக்கு வந்துவிட்டன. ஓரணாவுக்கு வாங்கினாலும் போதுமே. தானே பயிர் செய்த பொருளைக் கொண்டு குவித்த மாதிரி உவகையுண்டாகுமே!

உரிமையுடன் ரூபாயைக் கேட்கக் கூச்சமாகத்தானிருந்தது. எதிர்வீட்டுச் சிறுமியை அழைத்து 'சில்லறை வேணும்' என்று சொல்லியனுப்பினாள். கொடுத்திருந்த ஒரு ரூபாயும் வருமென்று ராதையின் எண்ணம். அந்தச் சிறுமியோ 'ராதா மாமிக்குப் பணம் வேணுமாம்!' என்று கூவியது. ராதையின் செவியில் அது விழுந்தபோது அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஒரு எட்டணாவைக் கொண்டு வந்தான் அவர்களகத்துத் தளர் நடை பாலகன்.

குழந்தை வந்ததே என்று கொஞ்சிவிட்டு அனுப்பக் கூட ராதைக்கு உற்சாகமில்லை. மாதக் கடைசி ஆனதனால் எல்லோருக்கும்தான் கையைக் கடிக்கிறது என்று சிரித்துக்கொள்ள வேண்டிய சமயத்தில், ராதைக்கு மனதில் கடுகடுப்புத்தான் உண்டாயிற்று. அவரும் அவளும் என இருவரே அடங்கிய அவளுடைய சிறு குடித்தனத்திலே, பணத்தட்டு ஏற்படவே நியாயமில்லையே! ஆனால், மாதந்தோறும் அநியாயமாக ஏற்படுகிறது; குடித்தனம் ஆரம்பித்தபொழுதே கடன் என்றால் விடியுமா என்ன? எதிர் வீட்டினர் ஆயிரம் ரூபாய் மாத வருமானமுள்ளவர்கள். ஆனால், அம்பாரம் சம்சாரம் அங்கே. அவர்களைப் போலவே செழிப்பிலும் செட்டுங்கட்டுமாக இங்கேயும் நடக்கிறது. வருமானத்திலே பெரிய வித்தியாசம் இருக்கிறது உண்மை... ஆனால்?....

கீரையைக் காம்பாய்ந்தவாறு சிந்தனையிலிருந்த ராதை லேசான ஓசையைக் கேட்டுத் திரும்பினாள். சைகிள் கூடையை அவளருகே வைத்திருக்கிறான் கிட்டு!

"வந்தாச்சா?" என்று கழுத்தை வளைத்துப் பார்த்து விட்டுக் கூடையை ஆராய்ந்தாள். அப்பளம், பெருங்காயம், காப்பிக்கொட்டை, தசாங்கம்... சென்னையை விட்டு வடக்கே வந்துவிட்டவர்கள், சென்னையின் வாடகையை நுகருவதற்குப் பயன்படுகிற பொருள்கள்...

"பணம் இருந்ததா? கணக்கு வைத்தீர்களா?" என்று கேட்டாள் ராதை.

"காப்பிக்கொட்டைக்கு மட்டும்தான் தரவில்லை. மற்றவையெல்லாம் பணம் கொடுத்துத்தான்! இன்றைக்குப் பல் டாக்டரிடமிருந்து நாலு ரூபாய் பிடுங்கிவிட்டேன்!" என்று குஷாலாகச் சொல்லியவாறு உடை மாற்றினான் கிட்டு.

"ஓஹோ, இன்னும் அந்த முற்றுகையை விடவில்லையா? ஏதோ இந்தமட்டில் மாதக் கடைசியிலே அது உபகாரமாய்த்தானிருக்கு," என்று ராதை சாமான்களை உள்ளே வைத்தாள். வேறு எந்த வழியிலும் தன் மாமனாரின் பணம் வராவிட்டாலும், இப்படியாவது ஒரு அவசர அவசியத்துக்கு உதவுகிறதே என்று நினைத்தபோது ராதையின் நெஞ்சு உலர்ந்தது. கறிகாய் வகைகளை உலர்த்தி வற்றல் போட்டுக் காப்பாற்றுவது போன்று தன் நெஞ்சைக் காத்துக் கொள்ளப் பழகியவள், ஆனால் இன்று தன் உணர்ச்சிகளை, கீரையைச் சுண்டிப் பக்குவப்படுத்துவது போல அடக்கிப் பக்குவமாக்க முயன்றாள்.

அந்தி வந்ததும், குத்து விளக்கை ஏற்றிய பிறகு கும்முட்டியை கொஞ்சம் தணலுடன் கூடத்தில் வைத்து தசாங்க தூபம் போட்டாள் ராதை. நறுமணப் புகை மேலே எழும்பி, சுவாமி படங்களையெல்லாம் தழுவிக்கொண்டு மிதந்தது.

“போதுமா புகை?” என்று கேட்டாள்.

“இங்கே போதும்; மற்ற ரூம்களிலும் கொண்டுபோய் போடு. ஈ, கொசுவுக்கெல்லாம் எதிரி இந்த தசாங்கம்.”

“அது சரி; ஆனால் மாசக் கடைசியில் வாங்கினதை, காசு கொடுத்து வாங்கிவிட்டு, நெருப்பில் போட்டு எரிக்க என்னவோ போல இருக்கு.”

“அதற்காக தசாங்கத்தைத் தூபம் போடாமல் சாப்பிட முடியுமா? உடுத்த முடியுமா? மாதக் கடைசியில் கூட இப்படி செழிப்பாகவே இருக்கிறோம் என்ற திருப்தி வரக்கூடாதா?”

“இந்த மாதிரி ஒரு திருப்திக்காகத் தான் பல் டாக்டரை சண்டை பிடித்தீர்களா? ஐயோ, பாவம்,” என்று ஒரு தினுசாக மழுப்பிவிட்டு, ராதை கும்முட்டியை அப்பால் கொண்டுபோய் ஒவ்வொரு அறையிலும் தூபம் போட்டாள். ஆறு அறைகள், சிறிதும் பெரிதுமாய், வசதியாய், அமைந்த வீடு. குறைந்த வாடகை தான். இந்த நல்ல வீடு. இவர்களுக்கு வாய்த்ததற்குக் காரணம் கிட்டுவின் தந்தையான அவளுடைய மாமனார். எதிர்வீட்டு ஆபிஸர் மாதிரி அவள் மாமனாரும் இந்த வீட்டிலே ஆயிரம் ரூபாய்ச் சம்பளக்காரராக வசித்தார். வேலையினின்று ஓய்வு பெற்றுச் சொந்த ஊருக்குப் போனபொழுது கிட்டுவுக்கு இந்த ஊரிலே வேலை கிடைத்தது; வீடும் இதே நிலைத்தது. விசாலமான வீட்டின் வசதியுடன் அங்கேயிருந்த கட்டில், மேஜை முதலிய பொருள்களும் கிடைத்தன - யாருக்கும் பரிசாகவோ விற்பனைக்கோ விட்டுப் போகாமல் பிள்ளைக்கே வைத்துவிட்டுப் போனார் தந்தை. இந்த விஷயத்தில் மகிழ்ச்சி, நன்றி எல்லாம் உண்டு கிட்டு தம்பதிக்கு!

'நம்மகத்தில் சாமான்கள் அதிகம் தான் - கொசு ஈ அதிகம். தசாங்கம் நிறைய போடத்தான் வேண்டும்' என்று சொல்லிக்கொண்டே, ராதை கூடத்தில் அமர்ந்தாள். ஒன்றுமே சொல்லாமல், திருப்தியைப் புலப்படுத்தும் வகையில் உதடுகளைச் சேர்த்துக் கோணங்கி பண்ணிவிட்டு சாய்வு நாற்காலியில் நன்றாகச் சாய்ந்துகொண்டு கால்களை நீட்டி முறித்தான் கிட்டு.

சற்றுப் பொறுத்து நினைவில் எழுந்த விஷயத்தைக் தொடர்ந்து ராதை பேச்சுக் கொடுத்தாள். “உம், இந்தப் பல் டாக்டரிடம் இன்னும் எத்தனை வருஷங்கள் மல்லுக்கு நிற்கப் போகிறீர்கள்? இது வரைக்கும் இரண்டு வருஷத்திலே ஐம்பது ரூபாய் தந்திருப்பானா?”

“உம்.”

"அடிக்கடி போய்க் கேட்கிறீர்களாக்கும்."

“வருகிற வழிதானே அவன் வீடு? அதனால் அடிக்கடி அவனைப் பார்த்து சண்டை போட முடிகிறது!”

“சண்டை போடுவேளா நீங்கள் என்று எனக்கு அதிசயமாயிருக்கிறது! தேவலை!'

“சண்டை என்றால் நாலு அதட்டல் தான்; எனக்குக் கேட்க உரிமை இருக்கிறது என்கிற மாதிரி.”

"உரிமை கொண்டாடுகிறபொழுது சண்டைக்காரன் பட்டம் வரத்தான் வருகிறது, இல்லையா?'

“உம்.”

"போன வருஷம் நாம் ஊருக்குப் போனபொழுது உங்கள் அம்மா என்ன சொன்னார் தெரியுமா? 'கிட்டுவுக்கு சாமர்த்தியமில்லை; பீரோ நாற்காலி என்கிறமாதிரி இரண்டு உருப்படிகளை நகர்த்திக்கொண்டு வரத் தெரியவில்லை' அப்படீன்னார்".

"அது முடியுமா?" என்றான் கிட்டு.

"எனக்கே அம்மாவின் பேச்சு வேடிக்கையாகத்தான் இருந்தது. அப்பா சாமர்த்தியமில்லாமல் முன்னூறு ரூபாயைக் கொடுத்துவிட்டாரே, பல் டாக்டருக்குக் கடன்! அது தெரியவில்லை அம்மாவுக்கு. பணத்திற்கு ஈடு பிடுங்க உங்களுக்கு சாமர்த்தியமில்லையாம்'."

கிட்டு ஏதும் பேசாமலிருந்தாலும் முகத்தில் ஏதோ பாவனை படர்ந்திருந்தது. ராதைக்கு மனசு கேட்கவில்லை. "மாதம் ஐந்து ரூபாயாவது வசூல் பண்ணும்படி அப்பா சொல்லிவிட்டார்; அதற்காக நீங்கள் சண்டைக்கும் பேச்சுக்கும் தயாராகி பல் டாக்டர் வீட்டுக்குப் போய்ப் போய் நிற்கிறீர்கள் என்று நான் அம்மாவிடம் சொல்லியிருந்தேன். 'அப்படி நிற்க வேண்டாமே, ஏதாவது சாமான் கிடைக்கட்டுமே,' என்று அம்மாவுக்குத் தோன்றியிருக்கும்."

"அதற்கென்ன பண்ணலாம்? கடனாளியானாலும் அவன் ஆணவமாய்ப் பேசுகிறான். அவனை அடக்கி வைக்க வேண்டும் என்று தான் நானும் சப்தம் போட்டுப் பேசுகிறேன். ஏதோ பாவம், அவனும் இரண்டு, நாலு என்று கொடுக்கிறானே! வரும்படி கொஞ்சம், செலவு ஜாஸ்தி அவனுக்கு. அமெரிக்கா போய்ப் படித்தவன்; ஜபர்தஸ்து வேண்டியிருக்கு. இங்கே வெற்றிலை மெல்லுகிற ஜனங்கள். பல்மேல் கவனம் யாருக்கு? வரும்படி எப்படி வரும்?"

கிட்டுவை ஆமோதித்து "உம்," என்றாள் ராதை. ஆனால், அவளும் வேறு வினாவில் ஈடுபட்டிருந்தாள். தன் கணவனுக்கு சாமர்த்தியமில்லை என்று தன் மாமியார் ஏன் சொன்னார்? ஏன் சொல்லமாட்டார்? இந்த யோசனை ராதைக்கு.

பிள்ளையின் பேதைமையை உணர்ந்துதான் அந்தத் தாய் அப்படியொரு அபிப்பிராயம் சொன்னார் - சந்தேகமென்ன?

கிட்டுவுக்கு இந்த ஊரில் வேலை கிடைத்த பின் சில மாதங்களுக்குப் பிறகுதான். அவனுடைய பெற்றோர் சொந்த ஊர் சென்றனர். அந்த சில மாதங்களும் தான் சம்பாதித்த பணத்தைக் கிட்டு பெற்றோரிடமே கொடுத்து வந்தான். அது நியாயம்தான் என்றே இருக்கட்டும்; ஒரு நாளாவது மனைவியை ஓரிடத்திற்கு அழைத்துப் போகும் நினைப்போ முயற்சியோ செய்தவனில்லை கிட்டு. அது அடக்கம்தான் என்றே இருக்கட்டும். ஒரு ரூபாய் கூட 'இந்தா உனக்கு', என்று கொடுத்ததில்லை ராதைக்கு. அது அவனுக்கு அழகு என்பதாகவே இருக்கட்டும். ஆனால் தினசரி குளிக்க சோப்புக்கூட தனித்தனி என்று இருந்ததே - ராதை எப்படி வாங்கிக்கொண்டாள்? அவளுடைய பணம் என்று ஏதோ இருக்கும் - அம்மா கொடுத்தது, அல்லது அப்பா கொடுத்தது... அதுவுமில்லையானால், 'சோப்பு வேணும்' என்று கிட்டுவிடமே சொல்லுவாள் ... இப்படி நடந்தது. இந்த மாதிரி இருப்பதெல்த்தலாம் இளப்பமா, அவமானமா? நன்மைதான் என்பதாகவே இருக்கட்டும்!

ஆனால், கிட்டுவின் அன்னையின் மனதில், தன் பிள்ளை ஒரு மோழை என்ற எண்ணம் தோன்றக் காரணம் அது தான்!ஆனால், அவனுக்குத் தெரியாத சமர்த்தைச் சொல்லித் தர அந்தத் தாயார் முற்படவேயில்லை! சமர்த்துக் கற்பிக்கவும் மனதைத் கெடுக்கவும் மனைவி என்பவள் ஒருத்தி இருக்கும் போது, அந்தக் கவலை ஏன் என்ற எண்ணம் போலும்! அந்த மனைவிக்கும் சாமர்த்தியம் போதாது என்பது தெரியும் - ஆனால் அதற்காகக் கற்றுத்தரக்கூடுமா?

கிட்டுவின் தந்தை செலவாளி. எத்தனை பணமிருந்தாலும் பறக்கும்; தானமும் கடனும் இறக்கைகள் போல ஒட்டிக்கொள்ளும் அவர் பொருளுக்கு. "என் பணம் எல்லோருக்கும்

சொந்தம்; யார் வேணுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்," என்பார். "இந்தா," என்று ஒரு மூக்குத்தி கூட நாட்டுப் பெண்களுக்கு அளிக்கவில்லை. அவர்களே எடுத்துக்கொள்ளட்டும் என்ற கருத்தோ! கிட்டுவின் பணமும் கரைந்தது. ராதையும் அவனும் பின்தங்கி, குடித்தனம் என்று சுதந்திரமாகத் துவக்கினபொழுது ஒரே மாதச் சம்பளம் கையிருப்பு இருந்தது. அடுத்த மாதமோ, அடுத்த பட்சமோ, அது இன்ஷூரன்ஸ் பிரீமியமாக மாறிப் போயிற்று. 'குடித்தனம், துரைத்தனம்' என்பார்கள். ஆழாக்கு அரிசியென்றாலும் அடுப்புக் கட்டி மூன்று. அன்று தொட்டு இன்றுவரை வரவு - செலவு இழுப்பு.

இந்த யோசனையிலிருந்தவளைப் பார்த்து கிட்டு வேடிக்கையாக, "என்ன, சாப்பாடு உண்டா?" என்றான்.

ராதை விசுக்கென எழுந்தாள். 'உங்களுக்கு சமர்த்து போதாது என்று நானுங்கூடச் சொல்கிறேன். அப்பாவின் பணத்தை வசூல் பண்ண உங்களுக்கு உரிமை இருக்கிறது என்கிறீர்கள்; உங்கள் சம்பளத்தில் மாதம் ஒரு ஐந்து ரூபாய் எனக்குத் தர உங்களுக்கு உரிமை தோன்றினதுண்டா? நான் யாரிடம் உரிமை கொண்டாடுவது என்று தெரியாமல் தவித்தேனே! சில்லறைச் செலவுக்கு உதவட்டும் என்று மூன்று நான்கு ரூபாயானாலும் பல் டாக்டரிடமிருந்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதே, நினைத்துப் பாருங்கள்!" என்று படபடப்பு வெளிப்படச் சொல்லிவிட்டுப் போனாள். கிட்டுவுக்குத் தென்பில்லை விடையளிக்க, அவனே கொஞ்ச காலமாக உணர்ந்து வருவதைத் தானே அவள் சொல்கிறாள்! பல கேள்விகளை ஒரே மூச்சில் ராதை இன்று கேட்டுவிட்டாள் என்பதுதான் புதுமை. ஆனால் அவள் மூச்சுக் காற்றில் இந்த வினாக்களின் வெம்மையை அவன் உணர்ந்தாயிற்று முன்னமேயே.

** ** **

இரண்டு நாள் கழித்து கிட்டு, "பல் டாக்டரிடமிருந்து களையாய் ஒரு தொகைக்கு ஈடு கறக்கப் போகிறேன்!"என்றான் மிடுக்காக.

"மேஜையா, பீரோவா?"

"ஹே, அதெல்லாமில்லை. நாமிருவரும் பல் சுத்தம் செய்து கொள்ளப் போகிறோம். அமெரிக்கா போய் வந்தவன் அல்லவா, அவன் பீஸ் அதிகம்! வேலை கொடுத்து, ரூபாய் நஷ்டப்படச் செய்வோம்!'

"நமக்கு வரும்படி இல்லை."

"அதனால் என்ன? வருஷந்தோறும் பல் சுத்தம் பண்ணிக்கொள்ள வேண்டியது நியாயம்; நன்மை."

"முன்னூற்று சொச்சமும் கரைய ஆறு. வருஷம் போய் வரலாமா, எட்டு வருஷமா?" என்று ராதை நையாண்டிக்கு ஆரம்பித்துவிட்டு, கிட்டுவின் முகத்தைப் பார்த்ததும் சிரிப்புக் காட்டி நிறுத்திவிட்டாள். பிறகு "எப்படி சுத்தம் செய்வார்களாம்? வலிக்காதே?'என்று கேட்டு பேச்சை மாற்றினாள்.

"லேசாகத் தெரியும்."

"நம்ப மேல் கோபமில்லையே, டாக்டருக்கு?"

"ஏன், எதற்காம் கோபம்? பிரமாதமா என்ன?"

"சும்மாக் கேட்டேன். கோபப்பட்டு நம்ம பல்லில் விஷம் புகுத்திவிட்டு, 'செப்டிக் ஆகியிருக்கும்,' என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள அவனுக்கு சௌகரியம் ஆச்சே!" என்று ராதை நகைத்தாள்.

ஒரு தினுசாகக் கடுகடுப்பை முகத்திலேயே காட்டி விட்டான் கிட்டு, சாமர்த்தியமாக.

ராதை பல் வைத்தியரின் வீட்டிற்குச் சென்றாள். டாக்டரைப் பார்த்த பிறகு 'இவனா கடனாளி? என்று நினைக்கவில்லை. 'இவரா கடனாளி!' என்ற வியப்பும் மதிப்பும் தோன்றின. அவருடைய மனைவியைப் பார்க்க விரும்பினாள்; பார்த்தாள். அந்த அம்மாள்தான் பலவீனமாய் இளைப்பாய் இருந்தாள், கடனாளியின் மனைவி என்று நம்பக்கூடியபடி. ஆனால் முதலில் அனுதாபப்பட்ட ராதை, பிறகு அதிருப்திப்பட்டாள். 'உங்கள் ஊர்ப் புடவை ரொம்ப நன்றாயிருக்கிறதே; விலைகூட மலிவு. எனக்கு ஒன்று தருவித்துத் தா!' என்று அவள் ராதையின் புடவையை மெச்சியபொழுது, 'ஆஹா அப்படியே!' என்று பொருமினாள் ராதை. டாக்டருடைய குழந்தைகள் அழகும் செழிப்புமாக இருந்தனர். வீடு நிறைய அழகான பொருள்கள். ஒரு பெரிய ஹால் நிரம்பியிருந்தது, சாப்பாட்டு மேஜை நாற்காலிகளாலே. நல்ல கருங்காலி மரம். உயர்ந்த ரகப் பிங்கான் சாமான்கள், பூக்கிண்ணங்கள், சுவரில் உயர்ந்த வகைச் சட்டம் போட்ட படங்கள்....

வீடு திரும்பும்பொழுது ராதை "ஏதாவது ஒரு மர சாமான் பணத்துக்கு ஈடாகத் தரலாமே? அவராக அப்படிச் சொல்லக் கூசுகிறாரோ என்னமோ?" என்றதும், கிட்டு, "வீண் பேச்சு!" என்று உறுமினான்.

அன்றைய தினம் ஒரு வரிசைப் பல் சுத்தம் ஆனதனால், மறுவரிசையைச் சுத்தம் செய்துகொள்ள இன்னொரு நாள் சென்றனர் கிட்டுத் தம்பதி. கிட்டு சுத்தம் செய்துகொண்டபோது, ராதை மறுபடி டாக்டரின் மனைவியோடு பேச வந்தாள். சில புகைப் படங்களைக் கவனித்தாள்.

"என் மாமனார் - மாமியார்' என்று டாக்டரின் மனைவி இரண்டு படங்களைக் குறிப்பிட்டாள்.

"இப்போ எங்கிருக்கிறார்கள்?"

"தெய்வமாகிவிட்டார்கள்," என்றாள் அந்த மாது. 'இறந்து விட்டார்கள் என்பதை அழகாகச் சொன்னாள்,' என்று எண்ணமிட்டபடி ராதை மற்ற படங்களைப் பார்க்கலானாள். ஆனால் டாக்டரின் மனைவியோ அவற்றை விளக்க முற்படாமல், "எங்கள் பாபு வெளி நாட்டில் இருந்த போதே மாமியார் போய்விட்டார். இவர் திரும்பி வந்த மறு வருஷம் மாமனாரும் போய்விட்டார். வயசுக் காலத்தில் அத்தனைத் தொலைவு அனுப்பியே இருக்க வேண்டாம். மாமனாருக்கு ரொம்ப ஆசை. செலவைப் பார்க்காமல் அனுப்பி வைத்தார். கிழவிக்குத் தாங்கவில்லை," என விவரித்தாள்.

'கணவர் வெளிநாடு சென்றார்,' என்ற பெருமை இல்லை அந்த மாதின் குரலில்; 'கணவர் வெளிநாடு போயிருக்க வேண்டாம்.' என்னும் வருத்தம்தான் தொனித்தது.

திரும்பும் வழியில் ராதை, "குடி கிடி பழகியிருப்பாரோ? எப்படிக் கடனாளியானார்? செழிப்பாகத்தானே இருந்திருக்க வேண்டும்?"என்று கேட்டாள் கிட்டுவை.

'உம், அதெல்லாமில்லை. அமெரிக்கா போய்ப் படித்ததற்கு நிறையப் பணம் கரைந்திருக்கும். அதை எடுக்கக் கூட வருமானம் வந்திருக்காது. படிப்புக்கு ஏற்ற மாதிரி வீடு வாசல், அலங்காரங்கள், பல் சிகிச்சை உபகரணங்கள் எல்லாம் அவசியமாகிவிட்டன. வீட்டு வாடகை குறைகிறதில்லை. தினமும் இரண்டு வேளை மாமிசமில்லாமல் சாப்பாடு இறங்குவதில்லை. செலவு ஏறுகிறது. பல்மேல் அக்கறை யாருக்கு? இவனுக்கு வருமானமில்லை."

"அவருடைய பல் வரிசையே மோசம். காவியேறிக் கிடக்கிறது!" என்று மெல்லச் சிரித்துச் சிந்தனையில் ஆழ்ந்து போனாள் ராதை.

சற்றே சிநேக பாவத்துடன் உறவாடிவிட்டு வந்ததற்காக, டாக்டரைக் கொஞ்சம் அமைதியாக விட்டு வைக்க விரும்பினான் கிட்டு. ஓரிரு மாதங்கள் பணங் கேட்கப் போகவில்லை. ராதையோ அந்தப் பேச்சை எடுக்கவேயில்லை. இந்த நிலையில் எதிர்பாராத நெருக்கடி ஒன்று ஏற்பட்டுவிட்டது. "ரொம்ப பணமுடையாயிருக்கிறது. நீ இருநூறு ரூபாய் அனுப்பினால் நல்லது," என்று கிட்டுவின் தந்தை எழுதிவிட்டார். கிட்டுவின் சம்பளத்தைவிட அதிகம்தான் அவருடைய பென்ஷன் தொகை. அது அவருக்குப் போதவில்லை! பெண் வயிற்றுக் குழந்தைக்குக் கூட கலியாணம் செய்ய வேண்டிய பொறுப்பை மேற்கொண்டவர் ஆயிற்றே! "மாமாமார்களா தருகிறார்கள்? தாத்தா தருகிறார். இஷ்டம்போல் வாங்கிக் கொள்ளடியம்மா," என்று பேத்திக்கு ஆசை ஆசையாகச் சீர் செய்த பாட்டி அவருடைய மனைவி. கையைக் கடித்துவிட்டது செலவு என்பதை அப்போது அவர்கள் பொருட்படுத்தவில்லை. இப்போது கிட்டுவுக்கு வந்தது நெருக்கடி!

கடிதத்தைப் பார்த்த பிறகு கிட்டுவும் ராதையும் பேசிக்கொள்ளவேயில்லை. ஆனால், கடிதத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் தான் ராதை, "என்ன செய்யப் போகிறீர்கள்?"என்று கேள்வி கேட்டாள்.

"எனக்கும் தெரியவில்லை. நூற்றைம்பதாவது அனுப்ப வேண்டும். கடனாக எடுக்கிறேன்."

"கடனை அடைக்க நமக்கு முடிய வேண்டாமா?"

"பணம் வருகிறதற்கு ஏதாவது சிக்கல், தடங்கல் ஏற்பட்டிருக்கும். கேட்டிருக்கும்போது சமயத்துக்கு அனுப்ப வேண்டாமா?"

"அப்படி வெறும் சிக்கல் என்றால், அங்கேயே புரட்ட முடியாதா? நமக்கு எழுதுவாரா?"

"என்ன அத்தனை கேவலமாய் நினைச்சூட்டே? அப்படியில்லாமல் போய்விடுமா?"

தந்தையின் செல்வம் அட்சய பாத்திரம் என்னும் நம்பிக்கை கிட்டுவுக்கு இருப்பதைக் காண ராதைக்கு வேதனையாகத்தானிருந்தது. ஆனால், ஆறுதலாகவும் இருந்தது. கபடமறியாத உள்ளம் தான் கிட்டுவுக்கு, என்று நன்றாகத் தெரிகிறதல்லவா?

"அப்பா கடிதத்தைப் பல் டாக்டரிடம் காட்டினால், கொடுத்தாலும் கொடுப்பார்."

"எனக்குத் தோன்றவில்லை."

"எனக்கும் முதலில் தோன்றவில்லை. இப்பத்தான் திடீர்னு நினைவுக்கு வந்தது."

"இப்பவும் எனக்குத் தோன்றவில்லை, தரமாட்டான்."

"உறவில்லாதவர்களுக்கெல்லாம் உங்கள் அப்பாவின் பணம் சொந்தம். உரிமையுடையவர்களுக்கு மட்டும் தோன்றுவதில்லை உரிமை! அப்பா இங்கிருந்து போகும்போது பீரோ, கட்டில், நாற்காலிகளை நமக்கு வைத்துவிட்டுப் போனார் என்று இந்த இதிலேயே நமக்குப் பெருமை கொண்டு போகிறது! பிரமாதம் தான்! இருநூறு ரூபாய் சாமான்களாச்சு. விற்றுவிட்டுப் பணத்தை அனுப்பிவிடுங்கள்.'"

"எதற்கு விற்கிறது? எனக்கு எங்கப்பா கொடுத்த சாமான்கள் உரிமையாய்த் தான்படுகிறது."

'ஏதாவது வாங்கியனுப்பச் சொல்லலாம் என்றால் அவர்கள் நமக்கு அனுப்பவாவது, வாங்கவாவது என்பீர்களே! நாம் அவர்களுக்குத் தர வேண்டிய அவசியமில்லை என்ற நிலைமையில் நாம் இருப்பது போதும் என்று சொல்லுவீர்களே!' என்று கேட்க விரும்பினாள் ராதை. ஆனால், கிட்டுவின் குனிந்த தலையையும், அவன் கைகள் மூக்குக் கண்ணாடியைச் சுத்தம் செய்யும் தோற்றத்தில் முகம் கன்றிக் கிடந்ததையும் பார்த்த பிறகு, ராதைக்குப் பேச

வாய் வரவில்லை. கடன் வாங்கித் தந்தைக்கு உதவி செய்யும் பணியில் அவனுக்குக் கடமையிருக்கிறதா என்று அவனே சங்கடப்படுகிறானே, போதாதா?

** ** **

"அனுப்பியாச்சா?" என்று வினவினாள் ராதை.

"உம்."

"கடன் வாங்கினோம் என்றால் அப்பாவுக்குப் பிடிக்காது."

"கடிதத்தில் அதையும் எழுதித்தான் அனுப்பினேன்."

"உம்," என்றாள் ராதை. மாமனார் திண்டாடவிடமாட்டார் என்று நம்பினாள். அந்தத் தெம்பு விரைவிலேயே கரைந்தது... பச்சைக் கற்பூரம் காற்றில் கரைவதுபோல.

பணம் அனுப்பிய புதல்வனுக்கு நன்றி கூறிக் கடிதம் எழுதுகையில், ஒரு புத்திமதியும் சொன்னார் தந்தை:

"உனக்கும் உன் மனைவிக்கும் ஒரு வார்த்தை. சிக்கனமாக இருங்கள். அதற்காகக் கஞ்சத்தனம் வேண்டாம். என் விஷயம் வேறு. ஏழை உறவினருக்கு உதவிகள் செய்ய வேண்டியதாயிற்று. பிள்ளைகள் இருவருக்கும் நல்ல கல்வி கொடுத்து என்னாலானதைச் செய்துவிட்டேன்."

இதுதான் அவர் எழுதினார்.

கிட்டுவின் நிதானம் அற்புதம். அதற்கு ஈடாக ஒரே படபடப்பு ராதைக்கு, அழவேண்டும்போலவும் இருந்தது. சிரிக்க வேண்டும்போலவும் இருந்தது. பிறத்தியாருக்கெல்லாம் பொருளை வழங்கிவிட்டு, வாரிசுக்காரப் பிள்ளைக்குத் தமது அனுபவ ஞானத்தை வழங்குகிறாரா? அப்படித்தான் அவருக்கு சிக்கனம் தெரிந்ததோ? இவர்களுக்குச் சிக்கனம் போதிக்கவும் வேண்டுமா? அவர் போதிக்க வேண்டிய அவசியமே இல்லாமல் எல்லாம் வகையாய் அமைந்துவிட்டதே! கஞ்சத்தனம் என்ற எல்லைக் கோட்டில் அடி எடுத்து வைக்காமல், அதன் அண்மையிலே நின்றவாறு, 'நாங்கள் சுகமாய்த்தானிருக்கிறோம்' என்று உண்மையும் கண்யமும் துலங்க விளங்குகின்ற உயர்வு இருக்கிறது; இதற்கும் தாழ்ந்து போக வேண்டுமா?

குடித்தனம் என்றால் துரைத்தனம்தான். ஆழாக்கு அரிசியானாலும் அடுப்புக் கட்டி மூன்றுதான். மனதறிந்து அவள் வீண் செலவு செய்வதில்லை. வருஷத்திற்கு ஒரு முகப்பௌடர் டப்பா, ஒரு பனிப்பசை சீசா, கோடை குளிர் என்னும் அவதிகளுக்கு இதமாக. கிட்டுவுக்கு அந்தப் பௌடரும் கிரீமும் கூட வேண்டாம். அவன் கல்லூரி நாளில் அவற்றை வேண்டிய மட்டும் ஆண்டு அனுபவித்தவன்தான் - புகை பிடிக்கும் வழக்கமோ, வேறு வழக்கங்களோ கிடையாது. பாக்குப் பொடி ஒன்றுதான் அவனுடைய மோகம். தம்பதியாய், சுதந்திரமாய் நாலு இடங்களுக்குப் போய்ப் பழகுவதனால், நடுத்தரக் குடும்பத்தினரின் அவசியத்தை மீறிய அளவில் சில ஆடைகளும் உடுப்புகளும் தேவைப்படுகின்றன. ஆனால், புடவைக்கேற்ற பாத ரட்சை, சோளிக்கு ஒத்த அழகுப் பை என்று பார்த்து அணியும் வழக்கமோ பித்தோ கிடையாது. கிட்டுவும் முன்பு ஆடம்பரப் பிரியரனாக இருந்தவனாயினும், ஆபீஸரின் பிள்ளை என்ற ஹோதா அடங்கி உத்தியோக வேட்டையில் திண்டாடி ஒடுங்கிவிட்ட பின், தன்னுடைய சொந்தப் பெருமைக்கு ஏற்ற மாதிரி மாறிவிட்டான்.

ஆனால் கிட்டு, ராதை இருவருக்கும் ஒரு விஷயத்தில் செலவுதான். ஆண்டுதோறும், விடுமுறை நாளில் ஒரு பயணம் இருக்கும். அவரவர்க்குப் பிறந்த மண்ணின்மீதுள்ள பாசமும், பார்க்காத இடங்களைப் பார்க்க வேண்டும் என்னும் ஆர்வமும் இயற்கைதானே?

கடந்த மூன்று நான்கு வருடங்களாகத்தான் தனிக் குடித்தனம் செய்வதனால், இந்த உல்லாசத்தை அவர்கள் விரும்பியதும் நியாயம்தானே! உள்ளத்தோடு உடன் பிறந்த ஆர்வமும், இன்னமும் பிறக்காத குழந்தைகளும் இந்தச் செலவுக்கு ஊக்கமளித்து வந்தன; வாழ்க்கையை ரசிக்கவும், மனம் நிறையவும் உதவிபுரிந்தன. பெற்றோரைப் பார்க்கவென்று மேற்கொள்ளும் ஊர்ப் பயணத்துடன், உபரியாக சில இடங்களைப் பார்க்கவும் திட்டமிடுவது வழக்கமாகிவிட்டது - அவ்வளவே. இது பொறுக்கவில்லையோ அவர்களுக்கு!

யோசிக்க யோசிக்க ராதையின் மனம் ஆறிக் குளிர மறுத்தது. கடைசியில் ஒரு நாள் தயங்கிக்கொண்டே கிட்டுவிடம், "என் முப்பது ரூபாயைத் தருகிறீர்களா?" என்று கேட்டாள்.

"எதற்கு இப்போ!"

"என்னிடம் இருக்கட்டும். வேண்டிய சமயத்தில் எனக்குக் கிடைக்காது. எங்கம்மா கொடுத்ததற்கு உருப்படியாய் ஏதாவது வாங்கணும்."

"சாயங்காலம் தருகிறேன்," என்று சொல்லிப் போனான் கிட்டு. ராதையின் மனசு ஏடு ஏடாகக் கிழிபட்டுக் கிடக்கும் புத்தகம்போல் சிறுத்துப் போயிற்று. முன்னம் புது நாட்டுப் பெண்ணாக இருந்த நாளில் ராதையைப் பார்க்க வந்தவர்கள் இரண்டு ரூபா, ஐந்து ரூபா என்று தாம்பூலத்துடன் கொடுத்தால், அதை மாமியாரின் சில்லறைப் பேழையில் போட்டுவிடுவாளே! இப்போது கணவனிடமே "என் பணம்," என்று பிரித்துக் கேட்கிறாளே!

ஆமாம்; கேட்கத் துணிந்தாள். ஏனெனில், பெருந்தன்மையாக இருந்து அவள் கண்ட பலன்?

சாதுப் பிள்ளையாய், லட்சணமாய், சம்பளப் பணத்தில் ஐந்து ரூபாய்கூட மனைவிக்காகக் கொடுக்கத் தெரியாத நல்ல மகனாய், கிட்டு இருந்தான். தன் பெற்றோர் அளித்த பணம் என்னும் குறியில்லாமல், வேற்றுமை அறியாப் பெண்ணாய் அவனுடைய மனைவி, இந்த ராதை இருந்தாள். இந்த நல்லதனமும், பெருங்குணமும் எதற்காயின? பணங் காசு விஷயத்தில் இவர்களுக்குப் பிடிப்பு போதாது, ஜாக்கிரதை கிடையாது என்னும் ஒரு அபிப்பிராயத்தைத்தானே தோன்றுவித்துவிட்டன?

"இனி குறியாக இருக்கிறேனே!" என்று ராதை மனம் இறுகிவிட்டாள்; கிட்டுவுக்கும் தெரியட்டுமே!

மாலையில் வீடு மீண்ட கிட்டு, "இந்தா இருபது ரூபாய். அப்புறம் பத்து ரூபாய் தந்துவிடுகிறேன்," என்றான்.

ராதை வாயைத் திறக்காமல் அந்தப் பணத்தை அப்படியே மேஜைமேல் வைத்துவிட்டு உள்ளே செல்லக் கிளம்பினாள்.

"இனிமேல் உன் பணத்தை நீயே வைத்துக்கொள். என் பர்ஸில் கொண்டுவந்து வைக்காதே!" என்றவாறு கிட்டு கால் பூட்ஸுகளைக் கழற்றியபொழுது ராதைக்குச் சொன்னது செருப்படி விழுந்தாற்போலக் குன்றியது உள்ளம்.

தொண்டையடைக்க, "நான் இருந்த விதம் மறந்து போச்சு உங்களுக்கு," என்று கூறிவிட்டு சமையலறைக்குள் மறைந்தாள்.

தங்கச் செருப்பாக இருந்தாலும் காலில்தான் கிடக்க வேண்டும் - இது ராதையின் மாமியாருடைய கருத்து. பெண்ணுக்கும், நாட்டுப் பெண்ணுக்கும் சமத்துவம் அளிக்க விரும்பினதில்லை அந்த மூதாட்டி. ராதை எத்தனை நல்லவளாகத்தானிருந்தாலும் கலப்பற்ற அன்பினை அளிக்க அவர் முயற்சி செய்யவில்லை. பெண்ணை அழைத்துக்கொண்டு, பெண்ணுக்குப் புடவை வாங்கப் போனார் ஒரு தடவை. "என்னிடம் இருக்கிறதே அம்மா, ஒரு பத்து ரூபாய். எனக்கும் ஒரு சாதாரணப் புடைவையை வாங்கி

வந்துவிடுங்கள்," என்று ரூபாயைத் தந்தாள் ராதை. தாயும், மகளும் கடையிலிருந்து வந்து, இரண்டு புடவைகளை எதிரில் போட்டுக் காட்டி "ஜோடியாகவே உடுத்தலாம் நாம் என்று உங்களுக்கும் நல்லதாகவே இருபத்தைந்து ரூபாயில் வாங்கிவிட்டோம் மன்னி," என்றாள் நாத்தனார். "பத்து ரூபாய்க்கு ஒன்றுமே இல்லை புடவை," என்றார் மாமியார். அந்தப் பத்து ரூபாயை அவளிடம் திருப்பித் தந்திருக்கலாம், அல்லது நாலு ரவிக்கைகளாகவே கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. புடவைப் பணத்தின் பங்காகவே அதை ஏற்றுக்கொண்டுவிட்டார். இது ராதைக்கு ரொம்ப வருத்தமாகத்தானிருந்தது. புடவையைப் புகழ்ந்த நண்பர்களிடம், "என் மாமியார் வாங்கித் தந்தார்," என்று சொல்லிக்கொள்ளத் அவள் தவறவில்லை. டஜன் கணக்கில் பெண்ணுக்கு ரவிக்கைகள் தைப்பார் மாமியார் தையற்கூலி கொடுத்து. மூளியில்லாமல் ராதைக்கும் ஒன்று வாங்கி, "அவளுடைய அம்மா மெஷின் வைத்திருக்கிறார் - தைத்துத் தருவார்," என்று தையற் கூலியை மிச்சம் செய்வார். இது ஒரு சிக்கனமா? அழகுள்ளதா?

ராதை தேனீர் தயாரித்துக்கொண்டே கண்ணீர் உகுத்தாள். "நமக்குப் பணத்தின் அருமை தெரியாது என்று அவர்கள் நினைப்பதற்கு ஆதாரம் இருக்கிறது," என்று கணவனிடம் விவரமாகச் சொல்லப் போகிறோமா என்று துடித்தாள்.

தேனீரை இரண்டு கோப்பைகளில் ஊற்றி, சிற்றுண்டியாக கைப்பிடி உப்புச் சீடையை தட்டில் போட்டு வைத்தாள் ராதை. "இரண்டு நாளாக இந்தச் சீடைதானே, இன்னும் ஏதாவது செய்யலாம் என்று தான் நினைத்தேன்,' என்று ஆரம்பித்தாள். கிட்டு ஒரு பொட்டலத்தைப் பிரிப்பது கண்டு நிறுத்தினாள்.

"இன்னொரு தட்டு கொண்டா," என்றான் கிட்டு.

"இதென்னது? ஸிங்கடாவும், ஸந்தேஷுமா? என்ன இப்படி? சிக்கனமாயிருக்கச் சொன்னால்?' என்று கிண்டலாக இழுத்தாள்.

"நீ ரொம்ப நாளாகக் கேட்டாயே!"

"ரொம்ப நாளைக்கு முந்தி கேட்டேன். அப்புறம் சொன்னேனா? இனிமேல் கேட்பேனா?"

"கோபப்பட்டு என்ன லாபம்? நல்லதாக எடுத்துக்கொள்ளணும்."

"எதை?"

"அப்பாவுக்கே நம் விஷயத்தில் யோசனை வந்துவிட்டதுபோலிருக்கு. தான் செலவாளியாகிவிட்டார். நானும் அப்படி ஒரு கஷ்டத்திற்கு வந்துவிடுவேனோ என்று நம்மை எச்சரிக்கிறார்... வேறென்ன?"

"நாம் என்ன, வீண் செலவு செய்கிறோமா?"

"இல்லை; அவசியமான செலவுதான் ஆகிறது. இதிலும் குறைக்கப் பார்க்கலாம் போலிருக்கு."

"நான் எதையாவது குறைத்தாலும் 'இதுகூட வேண்டாமா? அப்படி முடியாமற் போகவில்லை' என்று நீங்கள் சொன்னதுண்டா இல்லையா?"

"அது பழக்கப்பட்டுப்போன சுகவாசம்; சொன்னேன்," என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் கிட்டு.

"ஆபீஸரின் பிள்ளையாகப் பழக்கப்பட்ட சுகம்!" என்று மனதில் நினைத்துவிட்டு ராதை கணவன் வாங்கி வந்திருந்த சிற்றுண்டிகளைச் சுவைத்தாள்.

"வெறும் சீடைதானே, டீ போடாமல் காப்பியே போடணும் என்று எண்ணம். 'வேண்டாம் போ' என்று இருந்தேன். நீங்கள் இதெல்லாம் வாங்கி வந்துவிட்டதனால் வயிறு 'பர்த்தி'யாயிடுத்து' என்றாள் ராதை, திருப்தியாக 'டீ' அருந்தியபடி.

"நம்மகத்தில் காப்பி சாப்பிட ஒரு நாள் பல் டாக்டரை வரச் சொல்லணும். பட்சணக் கடையில் நான் வாங்கிக்கொண்டிருந்தபோது அவனும் வந்தான். நமக்கு இதெல்லாம் பிடிக்கும் என்றேன். தனக்கு நம்ம உப்புமா காப்பி பிடிக்கும் என்றான். ஒருநாள் வரட்டும். நம்ம வீட்டையும் பார்க்கட்டும். அவன் மாளிகைக்கு நம்ம வீடு ஈடுதான் என்று தெரியட்டும். 'வெறும் எம்.ஏ.வா.நீ? அப்பா பெரிய ஆபீஸர்; சீமைக்கு உன்னை அனுப்பல்லையோ?' என்று என்னைக் கேட்டான் முந்தியொரு தடவை. அவனுடைய அப்பா அவனை அமெரிக்காவுக்கு அனுப்பிவிட்டாராம்! அந்தப் பெருமை! என்னத்தைக் கண்டுவிட்டான் இப்போ? நம்ம கடனை அடைக்காமல் நம்மிடமே வீறாப்பு! அவன் தொண்ணூறு ரூபாய் வாடகை தருகிறான்; நான் நாற்பது தருகிறேன். ஆனால், வீடு எப்படியிருக்கிறது என்று பார்க்கட்டும். ஒரு நாள் கூப்பிடுகிறேன்," என்றான் கிட்டு. அவனுடைய கண்கள் சுற்றுமுற்றும் நோக்கின. பெருமிதமுடன் ஒளி வீசின.

அந்த ஒளியில் ராதை கிட்டு பேசாத பேச்சினைக் கண்டாள். 'ஹும், இந்த என் வீடு எப்படியிருக்கு! எங்கப்பா ரிடையராகிப் போனபோது வீட்டுக்காரனிடம் பேசி, எனக்காக நிலைக்க வைத்ததல்லவோ? சொற்ப வாடகையில் ஜம்மென்று வீடும், வீடு நிறைந்த சாமான்களும் ஜோராக அமைந்து...' இதுதான் அந்த விழிகள் பேசுகின்றன. முன்னம் பன்முறை வாய் பேசிய பேச்சுத்தான்; உள்ளத்தின் நினைப்புத்தான்.

"நாம் எங்கேயோ சந்து பொந்தில் குடியிருப்பதாக எண்ணியிருக்கிறான் போலிருக்கு!" என்று மெல்ல முணுமுணுத்துவிட்டு, கிட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தான், "அம்மாடி....." என்று ஆசுவாசமாய்.

"அவருக்குக் கடன் கொடுத்து ஏமாந்த மாதிரி ஏமாந்தால் சொத்து, நிலம், வீடு எல்லாம் சேராதோ?" என்று நினைத்துக் கொண்டாள் ராதை. ஆயிரமாயிரம் சம்பாதித்த தந்தை சொந்த வீடு கூடக் கட்டித் தரலாம். அந்த ஆசை அவருக்கு இல்லை; அந்த ராசி இந்தப் பிள்ளைக்கு இல்லை. ஆனால், தந்தையின் அன்பிலே நம்பிக்கையுள்ள மைந்தனுக்கு இதெல்லாம் தெரிகிறதா? தந்தையின் வழி வந்த பாக்கியமாக அவன் குடிக்கூலி கொடுத்து வசித்துவரும் வீட்டில் நறுமணம் கமழ்த்திக்கொண்டு ஒரு ஊதுவத்தி அவனுடைய அருகில் இருக்கிறது. நுண்ணிய புகைப்படலம் பெரு மகிழ்ச்சி அளிக்கிறது.

'ஊதுவத்திக்கு மாதம் ஒரு ரூபா ஆகுமா நமக்கு?' என்று திடுமெனக் கேட்டாள் ராதை.

'என்ன கேள்வி இது? உன் கேள்வியைக் கொளுத்து!' என்று சீறி விழுந்த பாவனையில், பெரிய சுளிப்பாக முகத்தைக் காட்டி விழித்தான் கிட்டு.

"ஒரு ரூபாய்ச் செலவில் மனசுக்கு எத்தனை திருப்தி கிடைக்கிறது, இல்லையா?" என்று ராதை கேட்கவே, கிட்டுவின் முகத்திலே சுடரிட்ட கோபம், நறுமணப் புகையின் இழைபோல ஓர் இனிய புன்னகையை வெளிப்படுத்தியது. "உம், உம், மனுஷனுக்கு என்னவெல்லாம் வேண்டியிருக்கு பார். செட்டுக் கட்டாயிருக்கிறோம் என்ற திருப்தியும் வேண்டியிருக்கு; செழிப்பாக இருக்கிறோம், தாராளமாயிருக்கிறோம் என்ற பெருமையும் வேண்டி இருக்கிறது. நாம் இந்த லயனில் பெரிய வீட்டில் இருப்பதனாலேயே, நான் படே உத்தியோகஸ்தன் என்று பலருக்கு எண்ணம். நாம் தருகிற வாடகையைச் சொன்னால்தான் நமக்குத் திருப்தியாகிறது. வீடு விஷயத்தில் நமக்கு நல்ல ராசிதான்," என்று மொழிந்துவிட்டு கையில் தினசரிப் பத்திரிகையைப் பிரித்துவிட்டான் கிட்டு.

தன் வீட்டின் பெருமையிலிருந்து உலகத்துச் செய்திகளைப் பற்றிய கருத்திற்குத் தாவிவிட்ட கணவனை ராதை ஓர் ஊன்றிய பார்வை பார்த்தாள். இந்த அல்ப சந்தோஷியின்

மனதில் நிலவும் அமைதியைக் கூர்ந்துணர்ந்தாள். கல் போன்ற இதயத்தில், அசையாத அன்பு இதயத்தில், சிறப்பான உணர்ச்சிகளையும், நினைப்புகளையும் சாஸனம் தாங்கியிருக்கும் இந்தப் பிள்ளையைப் பெற்றோர் தாம் பார்க்கவில்லை; ராதை பார்த்தாள்.

பிள்ளை மனம் கல் என்றால், இந்தப் பிள்ளையின் மனம் கற்சிற்பம்!

**********

(சுதேசமித்திரன், ஏப்ரல் 7, 1957)